# 1.பிரபவ வருடம்

**ஆண்டு :** 1987 - 1988

**பிரபவ வருடம் :** உத்தம வருடம்

**வருட அதிபதி :** பிரம்மா

**தமிழ் பெயர் :** நற்றோன்றல்

**ஆங்கிலப்பெயர் :** Prabhava

**தேவதைகள் :** பிரம்மா

**பாடல் :**

**ஆதி பிரபவத்தில் அம்புவியின் மானிடர்க்கு**
**சோதனையாய்ச் சாவு துன்பந் தோன்றுமே - தீதில்**
**தருப்பொலியும் அஃக மிகுந்தான் மாரிஓங்கும்**
**பருத்தி உப்பு ஆமணக்கும் பாழ்.**

**விளக்கம் :**

அதிக மழை பெய்து, அதனால் விருட்சப் பொருட்கள்(மரப்பொருட்கள்), தானியப் பொருட்கள் ஆகியவை நன்கு விளைந்து விவசாயம் செழிக்கும். பருத்தி, உப்பு, ஆமணக்கு முதலிய பொருட்கள் நஷ்டமடையும். மனிதர்களுக்கு துன்பங்களும், மரணங்களும் உண்டாகும்.

**பிரபவ வருடத்தின் பலன்கள் :**

விலை உயர்ந்த அரிய பொருட்களை சேமிப்பார்கள்.

நல்ல குழந்தைகள், மகிழ்ச்சி, செல்வம், நீண்ட ஆயுள் ஆகியவை உண்டாகும்.

**பிரபவ வருடத்தின் காயத்ரி மந்திரங்கள் :**

விஷ்வ பரமாத்மா பரம ஈஸ்ய வித்மஹே
விஷ்வ நாராயண பரம்பொருள் தீமஹி
தன்நோ ஸ்ரீ பிரபவ வருஷா ப்ரஷோதயாத்

# 2.விபவ வருடம்

**ஆண்டு :** 1988 - 1989

**விபவ வருடம் :** உத்தம வருடம்

**வருட அதிபதி :** மகா விஷ்ணு

**தமிழ் பெயர் :** உயர்தோன்றல்

**ஆங்கிலப்பெயர் :** Vibhava

**தேவதைகள் :** மகா விஷ்ணு

**பாடல் :**

**செய்ய விபவ வருடம் செய்புவனந்தான் விளையும்**
**பெய்யும் மழை எங்கும் பெருகுமே - ஐயமின்றி**
**மிக்க சுகம் பெறுவர் மேதினியோர் வேந்தருக்குத்**
**தக்க அபிமானம் உண்டு தான்.**

**விளக்கம் :**

பூமியெங்கும் அதிக மழை பெய்து ஆறு, குளம் முதலிய நீர்நிலைகள் பெருகி, பூமியில் நல்ல விளைவையும், மனிதர்கள் சுக வாழ்க்கையையும் அடைவார்கள். அரசாட்சி செய்வோர்களுக்கு மதிப்பும், மரியாதையும், அபிமானமும் கிடைக்கும்.

**விபவ வருடத்தின் பலன்கள் :**

கல்வித்திறன் உடையவர்கள்.
செல்வாக்கு மிக்கவர்கள்.
கலைத்திறன் கொண்டவர்கள்.

**விபவ வருடத்தின் காயத்ரி மந்திரங்கள் :**

விஷ்வ மகாமாயதேவாய வித்மஹே
சர்வ பரம்பொருள் விஷ்வ தேவா தீமஹி
தன்நோ ஸ்ரீ விபவ வருஷா ப்ரஷோதயாத்

## 3.சுக்கில வருடம்

**ஆண்டு :** 1989 - 1990

**சுக்கில வருடம் :** உத்தம வருடம்

**வருட அதிபதி :** சிவன்

**தமிழ்பெயர் :** வெள்ளொளி

**ஆங்கிலப்பெயர் :** Sukla

**தேவதைகள் :** மகேஷன்

**பாடல் :**

**நன்மை பெறும் சுக்கிலத்தில் நாடெங்குமே செழிக்கும்**
**புன்மை வினைநீங்கிப் பொருள் சேரும் - நன்மை**
**இருக்கும் பசுகறக்கும் எங்கும் மழை ஓங்கும்**
**பருத்தி உப்பும்தான் குறையும் பார்.**

**விளக்கம் :**

நீர்நிலைகள் நிறைந்து நாடு செழிக்கும். மனிதர்கள் தீமையை உண்டாக்கும் காரியங்களை விட்டு பொருள் சேர்க்கும் முயற்சிகளில் முற்படுவார்கள். பாற்பசு விருத்தியடையும். அதிக மழை பெய்யும். ஆனால், வெண்மை பொருட்களாகிய பருத்தி, உப்பு முதலியன குறையும்.

**சுக்கில வருடத்தின் பலன்கள் :**

அழகு நிறைந்தவர்களாக இருப்பார்கள்.
நல்ல குணம் கொண்டவர்கள்.
நல்ல குடும்பத்தை உடையவர்கள்.

**சுக்கில வருடத்தின் காயத்ரி மந்திரங்கள் :**

விஷ்வ காயத்ரி தேவ தேவி வித்மஹே
விஷ்வ துர்க்கா லலிதா பரமதேவி தீமஹி
தன்நோ ஸ்ரீ சுக்கில வருஷா ப்ரஷோதயாத்

# 4.பிரமோதூத வருடம்

**ஆண்டு :** 1990 - 1991

**பிரமோதூத வருடம் :** உத்தம வருடம்

**வருட அதிபதி :** சூரியன்

**தமிழ்பெயர் :** பேருவகை

**ஆங்கிலப்பெயர் :** Pramodoota

**தேவதைகள் :** கணேஷன்

**பாடல் :**

**வரும் பிரமோதூத வருட மழை கொஞ்சம்**
**கரும்பு மிகப் பலிக்கும் கண்டாய் - திரும்பப்**
**பயம் உண்டு பூமி பலியாது வேந்தர்**
**நயம் உள்ளராய் இருப்பர் நன்கு.**

**விளக்கம் :**

குறைந்த அளவு மழை பெய்யும். கரும்பு விளைச்சல்கள் அதிகரிக்கும். மக்களுக்கு பயம் உண்டாகும். பூமியில் விளைச்சல்கள் அதிகம் இருக்காது. அரசர்களுக்கு நன்மை உண்டாகும்.

**பிரமோதூத வருடத்தின் பலன்கள் :**

புகழ் உடையவர்கள்.

உதவும் மனப்பான்மை கொண்டவர்கள்.

பலரின் பாராட்டுகளை பெறக்கூடியவர்கள்.

**பிரமோதூத வருடத்தின் காயத்ரி மந்திரங்கள் :**

பிரம்மசாரிய சிருஷ்டிய வித்மஹே
பிரம்ம ஆசார ஆச்சாரியதேவா தீமஹி
தன்நோ ஸ்ரீ பிரமோதூத வருஷா ப்ரஷோதயாத்